உ

கடவுள் துணை

ஔவைப் பிராட்டியார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

தொகுத்தவர்:
''பல்கலைப்புலவர்''
க. சி. குலரத்தினம்

வெளியிடுவோர்:
சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல்
திரு. க. கனகராசா அவர்கள்
உரிமையாளர்
மில்க்வைற்
திருஆலவாய் — யாழ்ப்பாணம்.
1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மில்க்வைற் தாபகர்

# அமரர் வீ. மு. கந்தையாபிள்ளை

அவர்களின்

# நினைவு வெளியீடு

o

தோற்றம்: 1901 மறைவு: 1959

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு

அன்புள்ள குழந்தைகளே!

ஒளவைப் பிராட்டியார் ஒரு தெய்வப்புலவர். அவர் கலைமகளின் திருவருளை நிரம்பப் பெற்றவர். அவர் எங்களுக்காகப் பல நீதிநூல்களையும், நீதிப்பாடல் களையும் பாடியுள்ளார். அவர் செய்த நீதி நூல்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, பந்தனந்தாதி என்பனவும் பிறவுமாம். மூதுரை என்னும் நூலை வாக்குண்டாம் எனவும் வழங்குவர்.

இந்நூல்கள் யாவும் நீதியையும் நல்லொழுக்கத்தையும் கூறுவன. இவற்றை நாங்கள் இளமையிலேயே படித்துப் பாடமாக்கி, இவற்றில் சொன்னவண்ணம் வாழ்ந்தால் நாம் பெரியவராவோம், எங்களை எல்லோரும் நல்லவர் என்று கொண்டாடுவார்கள்.

சின்னக் குழந்தைகளும் படித்துப் பாடமாக்கும் வண்ணம் அமைந்த நூல் ஆத்திசூடி. இது ஆத்திசூடி என்று கடவுளை வணங்குவதால் ஆத்திசூடி எனப்பெயர் பெற்றது. இதில் 108 வாக்கியங்கள் உள்ளன. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் சின்னஞ்சிறிய வாக்கியங்களாயினும் பென்னம் பெரிய கருத்துக்கள் உள்ளவை. இவற்றை நீங்கள் முதலில் பாடமாக்குங்கள். இவற்றால் உங்களுக்குப் பல நன்மைகள் உண்டாகும். நீங்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகளாய் வருதல்வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

வணக்கம்

**க. கனகராசா**

திருஆலவாய்,
யாழ்ப்பாணம்.
10-4-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கடவுள் வாழ்த்து

## ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
## ஏத்தி ஏத்தித் தொழுவோ மியாமே.

திருவாத்திப் பூமாலையை அணிபவராகிய சிவபெருமான் விரும்பிய விநாயகக் கடவுளை நாம் துதித்துத் துதித்து வணங்குவோம்.

We will praise and worship often God Ganesha the beloved son of Siva who wears garlands of athi flowers.

## 1. அறஞ் செய விரும்பு

தருமத்தைச் செய்வதற்கு நீ ஆசைகொள்ளு. அறம் என்பது மேலானது. அது சுகத்தையும், செல்வத்தையும் இன்பத்தையும் தருவது. அது என்றும் அழியாதது. அது எம்மைக் காப்பது. அது உண்மையும், சுத்தமும் உள்ளது. ஆதலால் நாம் தருமஞ் செய்வதற்கு ஆசைப்படுதல் வேண்டும். ஏழைகளுக்கு உணவு உடை கொடுத்தல் தருமமாகும்.

Love righteousness.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஆறுவது சினம்

கோபம் தணியவேண்டியது. கோபம் நெருப்புப் போன்றது. அது எல்லாவற்றையும் அழிப்பதால் அதை வளரவிடாமல் தணிக்கவேண்டும். கோபத்தைக் குரோதம், சீற்றம், சினம் வெகுளி என்றும் கூறுவர். அது பொல்லாததால் அதனை நாம் தணித்தல்வேண்டும்.

Subdue wrath.

## 3. இயல்வது கரவேல்

கொடுக்கக்கூடிய பொருளை உன்னிடம் இரந்து கேட்பவர்களுக்கு ஒளிக்காமல் கொடு.

Do not with hold what you can afford to give.

## 4. ஈவது விலக்கேல்

ஒருவர் மற்றொருவருக்கு எடுத்துக்கொடுப்பதை நீ ஒருபோதும் தடுக்காதே.

Hinder not another's gift.

## 5. உடையது விளம்பேல்

உன்னுடைய கல்வித் தரத்தையாவது உன்னுடைய செல்வச் சிறப்பையாவது பிறர் அறியும்வண்ணம் நீயே எடுத்துக் கூறாதே.

Do not proclaim your worth.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஊக்கமது கைவிடேல்

நீ செய்யுந் தொழிலில் முயற்சியை வழுவவிடாதே. முயற்சி நல்ல நினைவாகவும் நல்ல செயலாகவும் இருத்தல் வேண்டும்.

Do not give up perseverance.

## 7. எண்ணெழுத் திகழேல்

கணக்கும் இலக்கணமும் கடினமானவை என்று விட்டுவிடாதே. அவற்றை நன்றாகக் கற்றுக்கொள்.

Do not scorn numbers and letters.

## 8. ஏற்ப திகழ்ச்சி

ஒருவரிடத்திலே போய் இரப்பது பழிப்பான செயலாகும். ஆகையால் நீ யாசிக்காது முயற்சி செய்து வாழ்தல்வேண்டும்.

Begging is contemptible.

## 9. ஐய மிட்டுண்

இரப்பவர்களுக்குப் பிச்சையைக் கொடுத்து நீயும் உண்ணு.

Give alms and eat.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஒப்புர வொழுகு

உலக நடையை அறிந்து அந்த வழியிலே நீயும் நடந்துகொள்.

Confirm to the ways of the wise.

## 11. ஓதுவ தொழியேல்

அறிவு நூல்களை வாசிப்பதை மரண பரியந்தம் விடாதே.

Cease not to learn.

## 12. ஔவியம் பேசேல்

பொருமை வார்த்தைகளை நீ பேசாதே.

Do not speak words of envy.

## 13. அஃகஞ் சுருக்கேல்

அதிக இலாபத்துக்கு ஆசைப்பட்டு நெல் முதலிய தானியங்களைக் குறைத்து விற்காதே. நெல்வயலை நன்ருகப் பாதுகாப்பாயாக.

Do not use short corn measures.

## 14. கண்டொன்று சொல்லேல்

ஒன்றைக்கண்டு வேருென்றைச் சொல்லாதே. உள்ளதை உள்ளபடியே கூறுக.

Do not speak differently from what you have seen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. ஙப்போல் வளை

ங, ஙா, ஙி, ஙீ முதலிய எழுத்துக்களில் ங என்னும் எழுத்துமாத்திரம் பயனுள்ளது. ஆனால் ஙா, ஙி முதலியன பயனில்லாதவை. எனினும் ங ஏனைய எழுத்துக்களைத் தழுவிக்கொள்ளுதல் போல, நீயும் உன் சுற்றத்தவர் பிரயோசனம் இல்லாதவராயினும் அவர்களைப் புறக்கணிக்காமல் தழுவிக்கொள்ளுதல்வேண்டும்.

Be as the letter "ங" supporting all your kin.

## 16. சனி நீராடு

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு முழுகு. புதன்கிழமைகளில் முழுகுவதும் நல்லதாகும். சிலர் சனி நீர் என்பதை ஜனி நீர் என்று கருதி ஆறு முதலிய புதுநீரில் முழுகு என்றும் கூறுவர்.

Take Oil Bath on Saturday.

## 17. ஞயம்பட வுரை

கேட்பவர்களுக்கு இன்பமுண்டாகும் வண்ணம் இனிமையாகப் பேசு.

Speak sweetly.

## 18. இடம்பட வீடெடேல்

விசாலமாக வீட்டைக் கட்டாதே.

Do not build too big a house.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. இணக்கமறிந் திணங்கு

நற்குண நற்செயல்கள் உள்ளவர்களை அறிந்து அவர்களோடு நட்புச் செய்.

Befriend after proper knowledge and understanding.

## 20. தந்தை தாய் பேண்

உன் அப்பாவையும் அம்மாவையும் அன்புடன் காப்பாற்று.

Protect your parents.

## 21. நன்றி மறவேல்

ஒருவர் உனக்குச் செய்த உபகாரத்தை ஒருபோதும் மறவாதே.

Do not forget good done.

## 22. பருவத்தே பயிர் செய்

விளையும் பருவமறிந்து தக்க காலத்திலே பயிரிடு.

Cultivate in season.

## 23. மன்று பறித் துண்ணேல்

நீதிமன்றத்திலே இருந்துகொண்டு வழக்குத் தீர்ப்புக்கு வருபவர்களிடம் இலஞ்சம் வாங்கி வயிறு வளர்க்காதே.

Do not live by litigious robbery.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. இயல்பலாதன செயேல்

உன் இயல்புக்கு மாருன அல்லது விரோதமான செயல்களைச் செய்யாதே.

Do not anything improper.

## 25. அரவ மாட்டேல்

நஞ்சுடைய பாம்புகளைப் பிடித்து ஆட்டி விளையாடாதே.

Refrain from snake - charming.

## 26. இலவம் பஞ்சிற்றுயில்

இலவம் பஞ்சுமெத்தையில் நித்திரை செய்வாயாக. பருத்திப்பஞ்சு ஆடை நெய்தற்குரியது. இலவம்பஞ்சு உடம்புக்கு உகந்தது, சுகத்தைத் தருவது.

Sleep on a matress of silk cotton.

## 27. வஞ்சகம் பேசேல்

கபட வார்த்தைகளை ஒருபோதும் பேசாதே.

Do not speak words of deceit.

## 28. அழகலாதன செயேல்

சிறப்பில்லாத காரியங்களைச் செய்யாதே.

Do nothing unbecoming.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. இளமையிற் கல்

சிறுவயதிலேயே வித்தையைக் கற்றுக்கொள்.

Learn while you are young.

## 30. அறனை மறவேல்

தருமத்தை ஒருபோதும் மறக்காதே. சிலர் இதற்கு தெய்வத்தை ஒருபோதும் மறக்காதே என்று பொருள் கூறுவர். அறத்தின் வடிவமாகவும், அறத்தின் பொருளாகவும் இருப்பவன் இறைவன். இறைவனை ஒருபோதும் மறவாதே என்று திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளும் அருளியுள்ளார். அறவன் ஆரூரரை மறவாது ஏத்துமின் என்பது அவர் திருவாக்கு.

Do not forget your duty.

## 31. அனந்த லாடேல்

அதிகமாக நித்திரை செய்யாதே.

Do not sleep too much.

## 32. கடிவது மற

எவரையும் சினந்து பேசுவதை மறந்துவிடு.

Do not speak harsh words to anybody.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. காப்பது விரதம்

எந்த உயிருக்கும் தீங்குசெய்யாமல் காப்பாற்றுவதே விரதமாகும்.

Keep the vow.

## 34. கிழமைப்பட வாழ்

உன்னிடத்தில் உள்ளபொருள் பிறருக்கும் உரிமைப்படும்வண்ணம் நீ வாழ்வாயாக. அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு:

Live for others.

## 35. கீழ்மை யகற்று

கீழ்மையாகிய குணத்தை நீ நீக்கு.
Refrain from what is low ond mean.

## 36. குணமது கைவிடேல்

மேலாகிய குணத்தை நீ கைவிடாதே.

Do not forsake what is good.

## 37. கூடிப் பிரியேல்

நல்லவரோடு சிநேகித்து நீ பின் அவரைவிட்டு நீங்காதே:

Do not part from friends.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. கெடுப்ப தொழி

பிறருக்குக் கேடுசெய்வதை நீ விட்டுவிடு.
Refrain from evil - doing.

## 39. கேள்வி முயல்

கற்றவர்கள் சொல்லும் நூற்பொருளைக் கேட்பதற்கு நீ முயற்சிசெய்.
Listen and learn.

## 40. கைவினை கரவேல்

உனக்குத் தெரிந்த கைத்தொழிலை நீ சமயத்தில் ஒளியாதே.
Do not Despise handicraft.

## 41. கொள்ளை விரும்பேல்

பிறர்பொருளைக் கொள்ளையிடுவதற்கு ஆசைப் படாதே.
Do not desire plunder.

## 42. கோதாட் டொழி

குற்றம் பொருந்திய விளையாட்டை நீ விட்டுவிடு.
Give up offensive sport.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. சக்கர நெறி நில்

அரச ஆணையின் வழியில் அடங்கி நிற்பாயாக.

Obey the law of your country.

## 44. சான்றோ ரினத்திரு

அறிவினால் நிறைந்தவர்களின் கூட்டத்தைச்சேர்ந்து இருப்பாயாக.

Associate with wise people.

## 45. சித்திரம் பேசேல்

மெய்போலத் தோன்றும் பொய்மொழிகளை நீ பேசாதே.

Do not speak words of deception.

## 46. சீர்மை மறவேல்

சிறப்பான குணத்தையும் காரியங்களையும் நீ மறந்துவிடாதே.

Do not forget what is excellent.

## 47. சுளிக்கச் சொல்லேல்

கேட்பவர் கோபிக்கும் வண்ணம் நீ எதனையும் பேசாதே.

Do not speak to provoke.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. சூது விரும்பேல்

சூதாடுவதற்கு நீ ஒருபோதும் ஆசைகொள்ளாதே.
Do not desire gambling.

## 49. செய்வன திருந்தச் செய்

செய்யுங்காரியங்களைத் திருத்தமாகச் செய்வாயாக.
Whatever you do, do it well.

## 50. சேரிடமறிந்து சேர்

சேரத்தகுந்த இடத்தைத் தெரிந்து நீ சேர்வாயாக.
Associate with worthy people.

## 51. சையெனத் திரியேல்

சீ என்று பிறர் இகழும்படியாக நீ துட்டனாகத் திரியாதே.
Do not roam about to be chidden.

## 52. சொற் சோர்வு படேல்

நீ பிறரோடு பேசும் சொற்களில் மறதிபடப் பேசாதே.
Do not become forgetful in your speach,

## 53. சோம்பித்திரியேல்

முயற்சியின்றிச் சோம்பேறியாகத் திரியாதே.
Do not be lazy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. தக்கோனெனத் திரி

பெரியவர்கள் உன்னை யோக்கியன் என்று புகழும் வண்ணம் நடந்துகொள்.

Move so as to esteemed.

## 55. தானமது விரும்பு

தக்கவர்களுக்குத் தானங்கொடுத்தலை நீ விரும்பு.

Love to give gifts.

## 56. திருமாலுக்கு அடிமைசெய்

மகாவிஷ்ணுவுக்கு நீ தொண்டுசெய்வாயாக.

Worship Vishnu.

## 57. தீவினையகற்று

பாவச்செயல்களை நீ செய்யாமல் நீக்கு.

Refrain from doing evil.

## 58. துன்பத்துக் கிடங்கொடேல்

தொழில் செய்யும்போது வரும் வருத்தத்துக்கு அஞ்சிவிடாமல் வேலையைச் செய்.

Do not give room to trouble.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59. தூக்கி வினைசெய்

முடிக்கத் தகுந்த உபாயத்தை ஆராய்ந்தறிந்து ஒரு காரியத்தைச் செய்;

Ponder before you act.

## 60. தெய்வமிகழேல்

கடவுளை நீ ஒருபோதும் நிந்தனை செய்யாதே.

Do not despise God.

## 61. தேசத்தோ டொத்துவாழ்

நீ வாழும் தேசத்தில் உள்ளவர்களோடு பகையில்லாமல் வாழு.

Live in harmony with your country men.

## 62. தையல் சொற்கேளேல்

கல்வியறிவில்லாத பெண்கள் கூறுஞ் சொல்லைக் கேளாதே:

Do not listen to women without education.

## 63. தொன்மை மறவேல்

பழைமையாகிய சிநேகத்தை நீ மறந்துவிடாதே.

Forget not your tradition.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 64. தோற்பன தொடரேல்

தோல்வியடையக் கூடிய கருமங்களை நீ ஆரம்பித்துச் செய்யாதிருப்பாயாக.

Do not engage in a failing cause.

## 65. நன்மை கடைப்பிடி

நலமுள்ளவைகளை நீ உறுதியாகப் பற்றுவாயாக. நலமுள்ளவை புண்ணியம் முதலியனவாம்.

Hold fast that which is good.

## 66. நாடொப்பன செய்

நாட்டிலுள்ளவர் ஒத்துக்கொள்ளக்கூடிய நல்லனவற்றையே நீ செய்வாயாக.

Do what the people with approve.

## 67. நிலையிற் பிரியேல்

நீ நிற்கின்ற உயர்ந்த நிலையிலே நின்று ஒருபோதும் நீங்காதே.

Do not fail from your status.

## 68. நீர்விளையாடேல்

ஆழமுள்ள நீரிலே நீ நீந்தி விளையாடாதே.

Do not sport in deep water.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 69. நுண்மை நுகரேல்

நோய் தரக்கூடிய சிற்றுண்டிகளை அடிக்கடி உண்ணுதே.

Do not indulge in delecacies.

## 70. நூல் பல கல்

அறிவைத் தருகின்ற நூல்கள் பலவற்றை நீ கற்றுக்கொள்.

Study many sciences.

## 71. நெற்பயிர் விளை

அன்னம் சமைப்பதற்கு ஏதுவாகிய நெல்லுப் பயிரைப் பிரயாசைப்பட்டு விளையச்செய்வாயாக;

Cultivate paddy.

## 72. நேர்பட வொழுகு

ஒழுக்கந் தவருமல் செவ்வையான வழியில் நட.

Act uprightly;

## 73. நைவினை நணுகேல்

பிறர்கெடத்தக்க தீவினைகளைச் செய்யாதே. நைவன நணுகேல் என்றும் பாடம் உண்டு. பின் வருத்தமடையக்கூடிய அலுவல்களைச் செய்யாதே.

Do not attempt what afflicts others;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 74. நொய்ய வுரையேல்

பயனில்லாத அற்பமாகிய வார்த்தைகளை நீ சொல்லாதே;

Do not speak trivialities.

## 75. நோய்க் கிடங்கொடேல்

நோய்கள் உன்னை அணுகும்படி உணவு, உறக்கம் முதலியவற்றால் இடங்கொடாதே: உணவு, உறக்கம் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்;

Lay not yourself open to illness;

## 76. பழிப்பன பகரேல்

அறிவுடையோர்கள் பழிக்கின்ற சொற்களை நீ பேசாதே.

Speak not to be despised;

## 77. பாம்பொடு பழகேல்

பால்கொடுத்தவர்களுக்கும் விஷத்தைக் கொடுக்கின்ற பாம்பைப் போன்றவர்களுடன் நீ சகவாசஞ் செய்யாதே;

Play not with the snake;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. பிழைபடச் சொல்லேல்

குற்றம் உண்டாகும்படி நீ ஒன்றையும் பேசாதே:

Do not speak with fault.

79. பீடுபெற நில்

பெருமை அடையும்படியாக நீ நல்ல வழியிலே நிற்பாயாக.

Keep up your dignity.

80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

அறிவுடையோரால் துதி செய்யப்பட்டவரை நீ கைவிடாது காப்பாற்றி வாழ்வாயாக;

Protect your dependants who propitiate you.

81. பூமி திருத்தியுண்

விளைநிலத்தைச் சீர்திருத்திப் பயிர்செய்து அதன் விளைவை உண்பாயாக;

Live by cultivating the soil.

82. பெரியாரைத் துணைக்கொள்

அறிவிற் சிறந்த பெரியோரை உனக்குத் துணையாகக் கொள்வாயாக.

Seek the help of the great.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 83. பேதைமை யகற்று

அறிவில்லாமையை உன்னிடத்தில் இல்லாமல் நீக்கிவிடு.

Wipe out ignorance.

## 84. வையலோ டிணங்கேல்

சிறுபிள்ளைகளோடு நீ கூடாதே.

Do not associate with the valgar.

## 85. பொருடனைப் போற்றி வாழ்

(பொருள் தனை) திரவியத்தைக் காப்பாற்றி வாழ்வாயாக.

Protect your wealth and prosper.

## 86. போர்த்தொழில் புரியேல்

சண்டையாகிய தொழிலை நீ செய்யாதிருப்பாயாக.

Provoke no quarrel.

## 87. மனந் தடுமாறேல்

துன்பம் உண்டான காலத்திலும் மனக்கலக்கம் அடையாதே.

Be not perplexed in mind.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 88. மாற்றானுக்கு இடங்கொடேல்

*பகைவனுக்கு உன்னை அணுகும்வண்ணம் இடங் கொடாதே.*

Give no room to your foeman.

## 89. மிகைபடச் சொல்லேல்

*சொல்லத்தகுவதற்கு அதிகமாக யாதொன்றையுஞ் சொல்லாதே.*

Do not speak too much.

## 90. மீதூண் விரும்பேல்

*அதிக உணவை நீ ஒருபோதும் விரும்பாதே.*

Love not too much food.

## 91. முனைமுகத்து நில்லேல்

*சண்டைமுகத்திலே நீ போய் நில்லாதே.*

Be not idle in the fighting ranks.

## 92. மூர்க்கரோ டிணங்கேல்

*அறிவில்லாதவருடன் நீ நட்புக்கொள்ளாதே.*

Do not associate with the wicked.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 93. மெல்லினல்லாள் தோள் சேர்

மென்மைத் தன்மை பொருந்திய உன்மனைவியோடு வாழ்வாயாக. பிறர் மனைவியரை ஒருபோதும் விரும்பாதே.

Live with your own wife. Do not go after strange women.

## 94. மேன்மக்கள் சொற்கேள்

அறிவால் உயர்ந்தோரின் சொல்லைக்கேட்டு நட.

Listen to the words of the wise people.

## 95. மைவிழியார் மனையகல்

மைதீட்டிய கண்களையுடைய பொதுமகளிர் வீட்டுக்குப் போகாமல் வாழ்வாயாக.

Avoid the houses of prostitutes.

## 96. மொழிவதற மொழி

சொல்வதைச் சந்தேகம் இல்லாமல் நீ சொல்லுவாயாக.

Speak decisively.

## 97. மோகத்தை முனி

மயக்கம், ஆசை ஆகியவற்றைக் கல்வியறிவைக் கொண்டு நீக்கிவிடுவாயாக.

Give up passion.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98. வல்லமை பேசேல்

உனக்குள்ள சாமர்த்தியத்தைப் பிறரறிய நீ வியந்து கூருதே.

Do not boast your parts.

## 99. வாது முற்கூறேல்

பெரியோர் முன்னே தருக்க வார்த்தைகளைப் பேசாதே.

Be not forward to challenge combats.

## 100. வித்தை விரும்பு

கல்வி கற்பதற்கு என்றும் நீ ஆசைப்படு.

Love learning.

## 101. வீடுபெற நில்

மோட்சம் அடைவதற்குரிய ஞான வழியிலே அஃதாவது சன்மார்க்க நெறியிலே நிற்பாயாக.

Work for salvation.

## 102. உத்தமனுயிரு

பல நற்குணங்களிலும் சிறந்தவனுய் இருப்பாயாக.

Be thou noble.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 103 ஊருடன் கூடிவாழ்

ஊர்மக்களிடம் கூடி, அவர்களின் நன்மை தீமைகளிற் கலந்து வாழ்வாயாக.

Live in harmony with your fellow - citizens.

## 104, வெட்டெனப் பேசேல்

கத்தி வெட்டைப்போல எவருடனும் கடினமாகப் பேசாதே.

Do not speak bluntly.

## 105. வேண்டி வினை செயேல்

வேண்டுமென்று எவருக்கும் தீய கருமத்தைச் செய்யாதே.

Do not act with an eye to the return.

## 106. வைகறைத் துயிலெழு

நாள்தோறும் விடியற் காலத்திலே நித்திரைவிட்டெழுந்திருப்பாயாக.

Wake up before sunrise.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 107. ஒன்னாரைத் தேறேல்

பகைவர்களை ஒருபோதும் நம்பாதே. ஒன்னாரைச் சேரேல் என்றும் பாடம் உண்டு. எக்காலத்திலும் பகைவரோடு சேராதே.

Associate not with enemies.

## 108. ஓரஞ் சொல்லேல்

எந்த வழக்கிலும் பக்கம்சாராமல், நடுவு நிலைமையுடன் சொல்லவேண்டியவற்றைச் சொல்லுவாயாக.

Be not partial and unjust.

சுபம்,

---

இந் நூலாக்கத்துக்கு ஆதாரம்:

1. ஆறுமுகநாவலர் உரை
2. சேர். இராமநாதன் உரை
3. வேங்கடசாமி நாட்டார் உரை
4. பாகியார்த்தம், ஆந்தரார்த்தம்
5. T. B. கிருஷ்ணமாச்சாரியார் M. A. B. L.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org